Judicial Form No. 53

[See Rule 42]

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

............

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI

| | |
|---|---|
| Calendar | **Case No. CC.No.58/2018** |
| Misscellancous | |
| Preliminary Register | |
| Sessions | |

| | |
|---|---|
| Deposition of **PW9** | Prosecution |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : திரு. வேணு (எ) வேலு |
| Father's Name/Husband Name | : த/பெ. சேட்டு |
| Village | : வெங்கடசமுத்திரம் |
| Taluk | : பாப்பிரெட்டிப்பட்டி |
| District | : தருமபுரி |
| Caste | : |
| Calling | : **PW9** |
| Religion | : இந்து |
| Age | :37 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **15th** Day of **December 2021.**

திரு. வேணு (எ) வேலு

**முதல் விசாரணை**

நான் தற்போது வெங்கடசமுத்திரத்தில் குடியிருந்து தமிழ்நாடு போக்குவரத்து கழகத்தில் நடத்துநராக பணிபுரிந்து வருகிறேன். பார்வை மகஜர் 2 வதாக உள்ள கையெழுத்து என்னுடையது தான். 2016 அன்று தேதி நினைவில் இல்லை, காலை 9.00 மணியளவில் எருமியாம்பட்டி பேருந்து நிறுத்தத்தில் ஒரு 100 அடி தொலைவில் விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டு சம்பவ இடத்திற்கு சென்றேன். அப்போது போலீசார் விசாரணை மேற்கொண்டு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் வரைந்தார்கள். பார்வை மகஜரில் நானும் கேசவனும் கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகஜர் அ.சா.3 ஆகும். சம்பவம் பற்றி விடியற்காலைதான் தெரியும். எனவே காலைதான் சென்றேன். சம்பவ இடத்தில் கடைகள் கிடையாது. அங்கிருந்த பெட்ரோல் பங்கிற்கும் சம்பவ இட்த்திற்கும் சுமார் 40 அடிதூரம் இருக்கும். நான் கையொப்பம் ்்போட்ட தாளில் விவரங்கள் எழுதி படித்து காட்டி அதன்பிறகுதான் நாங்கள் கையொப்பம் போட்டோம். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் பற்றி சம்பவத்தன்று இரவு எனக்கு தெரியும். மகஜர் தயார் செய்யும்போது நானும் வேணு என்பவரும் சம்பவத்தன்று இருந்தோம். வேறு யாரும் இல்லை. இச்சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. மற்றவர்கள் சொல்லித்தான் தெரியும். நான் கையொப்பம் போட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் பாப்பிரெட்டிபட்டி.**